# ஆர்ப்பாட்டம் தொடர்பிலான ஆய்வு: முடிவுகளின் சாராம்சம் - செப்டம்பர் 2022
## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டர்

### அறிமுகம்

சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிக மோசமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கை போராடிக் கொண்டிருக்கின்றது. சுதந்திரம் அடைந்ததில் இருந்து அடுத்தடுத்து நாட்டை ஆட்சிசெய்த அரசுகளின் விவேகமற்ற பொருளாதாரக் கொள்கைகள், 2006 முதலான ராஜபக்ஷவின் ஆட்சியில் இடம்பெற்ற பாரிய அளவிலான ஊழல்கள் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிகவும் சிக்கலான பொருளாதார தீர்மானங்கள் போன்ற காரணங்களினால், பெற்ற கடனுக்கான தவணைக்கட்டணத்தை திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு 2022 ஏப்ரலில் இலங்கை தள்ளப்பட்டது. வெளிநாட்டுக் கையிருப்பு குறைவின் காரணமாக எரிபொருள், சமையல் எரிவாயு, உரம், மருந்து, மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி தடைப்பட்டதுடன் அதன் விளைவாக கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. நாட்டின் வருந்தத்தக்க நிலை குறித்து பரவலான கோபமடைந்த மக்கள், நெருக்கடிக்கு பிரதான காரணமாகிய கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் பதவி விலகல் உட்பட தாம் ஆளப்படுகின்ற விதம் தொடர்பிலான மாற்றத்தை (சிஸ்டம் சேன்ஜ்) கோரி மக்கள் வீதிகளில் இறங்கினர். அரசியல் கட்சி பேதமின்றி இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் எதிர்ப்பு அலைகளின் அழுத்தத்தின் கீழ் உள்ளூரில் இருந்து தப்பிச் சென்ற கோட்டாபய ராஜபக்ஷ ஜீலை 14ஆம் திகதி தனது இராஜினாமாவை சமர்ப்பித்தார் வெற்றிடமான ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவை கடந்த ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி பாரளுமன்றம் தெரிவு செய்தது. நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றதில் இருந்து, விக்கிரமசிங்க தமக்கான பாராளுமன்ற ஆதரவை பலப்படுத்துவதுடன் சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்குனர்களுடனான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னுரிமை அளித்தார்.

அவர் ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகளை பலவீனப்படுத்தவும் நாடு ஆளப்படுகின்ற விதம் தொடர்பிலான மாற்றத்தைக் கோரும் இளைஞர் யுவதிகளை ஒடுக்குவதற்கும் கிடைக்கக்கூடிய அனைத்து அரசியலமைப்பு விதிகளையும் பயன்படுத்துகின்றார். இந்தப் பின்னணியில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வுப்பிரிவான சோஷல் இன்டிகேட்டர், ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் அவர்களின் கோரிக்கைகள் மீதான பொதுமக்களின் அணுகுமுறைகளைப் அறிந்துகொள்ளும் நோக்கில் நாடளாவிய ரீதியிலான ஒரு கணக்கெடுப்பாய்வை நடாத்தியது.


### முறைமையியல்

நான்கு பிரதான இன சமூகங்களில் (சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) இருந்து 1000 மாதிரி பதிலளிப்பவர்களுடன் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டம் தொடர்பிலான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாதிரியானது நாட்டின் 25 மாவட்டங்களிலும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குகின்றது. பல கட்டங்களில் எழுமாற்றைக் கொண்ட அடுக்கு மாதிரி தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரியின் இடம் தெரிவு செய்யப்பட்டது. ஆய்விற்கான வெளிக்களப்பணி 2022 செப்டம்பர் 22ஆம் திகதி முதல் ஒக்டோபர் 12ஆம் திகதி வரை நடத்தப்பட்டது. மக்கள் தொகையின் உண்மையான மாவட்டம் மற்றும் இன விகிதாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் தரவுத்தொகுப்பானது மதிப்பேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத்தொகுப்பு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

## ஆய்வு முடிவுகள்


***வருமானம் மற்றும் செலவு***

ஒக்டோபர் மாத கணக்கெடுப்பின் படி, இலங்கையர்களின் பொருளாதார துன்பங்கள் இன்னும் தொடர்கின்றன. கணிசமான பெரும்பான்மையினர் (சுமார் 82%) அவர்கள் சிரமங்களுடன் வாழ்கின்றார்கள் என்றும் அவர்களின் வருமானம் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யவில்லை என்றும் கூறுகிறார்கள். அவர்களில் பாதி பேர் (46%) தாங்கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்வதாகக் கூறுகின்றனர். எவ்வாறாயினும் 19% இனர் இந்தப் பொருளாதார மற்றும் அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் தங்கள் பொருளாதார நிலைமைகள் சுமூகமாக இருப்பதாகக் கூறுகின்றனர். பிரதேசமட்டத்தை பொறுத்தவரையில், மாநகரசபை பிரதேசத்திற்கு வெளியே வாழும் மக்களிடையே இந்த சிரமங்கள் ஒப்பீட்டளவில் அதிகம்.





***ஆர்ப்பாட்டம் தொடர்பான மனோபாவம்***

ஆர்ப்பாட்டத்தின் இயக்கத்தையும் அதில் கலந்து கொண்டவர்களையும் பலவீனப்படுத்தும் வகையில் அரசாங்கம் தொடர்ந்து செயற்பட்டு வரும் பின்னணியில், ஆர்ப்பாட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான பொதுமக்களின் அபிப்பிராயங்கள் குறித்து ஆய்வு கவனம் செலுத்தியது. அதில், பெரும்பான்மையான இலங்கையர்கள் போராட்டம் தொடர்பில் தொடர்ந்தும் சாதகமான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர் என்பதை காணக்கூடியதாக உள்ளது. தேசிய அளவில், 82% இனர் ஆர்ப்பாட்டமானது நாட்டில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியதாக நம்புகின்றனர். அதே சமயம் கிட்டத்தட்ட அதே சதவீதத்தினர் ஆர்ப்பாட்டமானது சந்தர்ப்பத்தின் தேவை என்று நம்புகின்றனர். குறிப்பிடத்தக்கதாக, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் யுவதிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை 42% இலங்கையர்கள் கண்டிக்கின்றனர் இருப்பினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டத்தை மீறியிருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று 58% பேர் ஏற்றுக்கொள்கின்றனர். மேலும், வயது அடிப்படையில் பார்க்கையில், இளைஞர்களிடையே (30 வயதுக்கு குறைவானவர்கள்) ஆர்ப்பாட்டத்திற்கான ஆதரவு சற்று அதிகமாக இருக்கின்றமையை ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது.




***நாடு ஆளப்படுகின்ற விதத்தில் சாத்தியமான மாற்றம் தொடர்பான மக்கள் அபிப்பிராயம்***

இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமை நாட்டின் அரசியலை பாரிய அளவில் சுமுகப்படுத்திய போதிலும், நாடு ஆளப்படுகின்ற விதத்தில் மாற்றம் வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் கைவிடவில்லை என்பதை ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. நாடு ஆளப்படும் விதத்தில் மாற்றத்தை ஆதரிப்பதாக கணிசமான அளவினர் (82%) கூறுகின்றனர். அவ்வாறு ஆதரிப்பது பெரும்பாலும் இளைஞர்களே என்பது ஆய்வில் தெரிகின்றது.





***நாடு ஆளப்படுகின்ற விதத்தில் சாத்தியமான மாற்றத்திகாக அர்ப்பணிப்புக்கான விருப்பம்***

நாட்டின் ஆட்சி முறை தொடர்பிலான மாற்றத்தை மக்கள் எவ்வளவு தீவிரமாக ஆதரிக்கிறார்கள் என்பதை ஆராய்வதற்காக, வழமையான பிரயாணம் மற்றும் போக்குவரத்து மற்றும் வழமையாக கொள்வனவு செய்யும் உணவு பொருட்கள் போன்றவற்றில் சில அர்ப்பணிப்பு செய்ய நேரிடல், மற்றும் அதிக வரி செலுத்த வேண்டிய நிலை, மற்றும் தாம் அல்லது தமது குடும்பத்தில் எவரேனும் தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்படினும் மாற்றத்தை ஏற்றுக்கொள்வீர்களா அல்லது ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா என பதிலளிப்பவர்களிடம் கேட்கப்பட்டது. அர்ப்பணிப்புகள் கடுமையாகின்ற போது ஆட்சி முறை தொடர்பிலான மாற்றத்திற்கு ஆதரவு குறைவடைகின்றது என்பதை ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, கணிசமான அளவினர் (முறையே 76%, 70%) தங்கள் வழக்கமான பிரயாணம் மற்றும் போக்குவரத்தில், வழமையாக கொள்வனவு செய்யும் உணவு பொருட்களில் சில அர்ப்பணிப்புகளைச் செய்ய நேரிடினும் மற்றும் ஆட்சி முறை தொடர்பிலான மாற்றத்தை ஆதரிப்பதாக தெரிவிக்கின்றனர். அதிக வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்படுமாயின் மாற்றத்திற்கான ஆதரவு (41%) வெகுவாகக் குறைவடைகின்றது. பதிலளிப்பவர் அல்லது அவரது/ குடும்ப உறுப்பினர்கள் யாரேனும் தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் எனின் இலங்கையில் கால் பகுதியினர் (26%) மட்டுமே மாற்றத்தை ஆதரிக்க ஒப்புக்கொள்கிறார்கள். பதிலளிப்பவர்களின் வயது அடிப்படையில் இந்த அணுகுமுறை வேறுபடவில்லை.



***சுகாதாரம் மற்றும் கல்வித் துறையை தனியார்மயமாக்குவது தொடர்பான மக்கள் அபிப்பிராயம்***




தற்போதைய பொருளாதாரச் மறுசீரமைப்பு தொடர்பில், தனியார்மயமாக்கல் ஒரு நிவாரணியான முன்வைக்கப்படுவதாக தெரிகின்ற அதே வேளை தற்போதைய விக்கிரமசிங்க அரசாங்கமானது அரசாங்க செலவினங்களைக் குறைப்பதற்காகக் கூறி அரச நிறுவனங்களை தனியார்மயமாக்குவதை வெளிப்படையாக ஆதரிக்கின்றது. சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய இரண்டு மிக முக்கியமான துறைகளை தனியார்மயமாக்குவது தொடர்பான மக்களின் கருத்து வேறுபாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளின் தரத்தை மேம்படுத்த அதனை தனியார்மயமாக்குதல் எனும் முன்மொழிவை இலங்கையர்களில் ஒரு சிறிய பகுதியினர் (27% மற்றும் 24%) மட்டுமே உடன்படுவதாக ஆய்வு முடிவுகள் காட்டுகிறது. இலங்கையர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றமை வெளிப்படுத்துவது கவனிக்கத்தக்கது. இந்த இரண்டு துறைகளையும் தனியார்மயமாக்குவதில் இளவயதினர் மற்றும் முதியவர்கள் இடையே வலுவான கருத்து வேறுபாடு இல்லை என்றாலும், தனியார்மயமாக்கலுக்கு இளவயதினர் மத்தியில் சற்று அதிக ஆதரவு உள்ளது.

***பொருளாதாரத்தை தனியார்மயமாக்குதல் தொடர்பான மக்கள் அபிப்பிராயம்***

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் புதிய உத்வேகத்தைப் பெற்றுள்ள நவ தாராளவாத சீர்திருத்தங்கள் தொடர்பான இலங்கையர்களின் அணுகுமுறையை வெளிப்படுத்தும் விடயங்கள் குறித்த மக்களின் அபிப்பிராயம் தொடர்பில் இந்த ஆய்வு மேலும் ஆராய்கிறது. பெரும்பாலான மக்கள், வெளிநாடுகள் எமது நாட்டில் முதலீடு செய்யவதை அனுமதிக்க வேண்டும் (60%) மற்றும் அரசாங்கம் தனிநபரின் வருமானம் ஈட்டும் திறனைக் கட்டுப்படுத்தக் கூடாது (63%) போன்ற கொள்கைகளை ஆதரிப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இருப்பினும், ஆய்வு முடிவுகளின்படி, அரசத்துறையைச் சுருக்கமடைவதை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உதாரணமாக, இலங்கையர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் (52%) நாட்டின் அபிவிருத்திக்கு அரசு நிறுவனங்கள் அவசியம் என்பதனால் அவற்றைத் தனியார்மயமாக்கக் கூடாது என்று கூறுகின்றனர்.



***நவ தாராளவாத பொருளாதாரத்தின் கீழ் அரசாங்கத்தின் பங்கு***




தற்போதைய பொருளாதார சீர்திருத்தம் பற்றிய விவாதத்தின் கீழ், நவ தாராளவாதிகள் அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையை குறைத்தல் வேண்டும், நலன்புரிச் செலவினங்களைக் குறைத்தல் வேண்டும், மற்றும் தொழில் வழங்கல் பொறுப்பிலிருந்து அரசாங்கத்தை விடுவித்தல் வேண்டும் என்று பரிந்துரைக்கின்றனர். ஆய்வு முடிவுகளின்படி, அதிகமான மக்கள் இந்த புதிய தாராளவாத கருத்தில் குறிப்பாக, நம்பிக்கை கொண்டுள்ளனர், அரசுத் துறை வேலைகள் மற்றும் வேலை வழங்குனராக அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என தெரிவிக்கின்றனர். இருப்பினும், மக்களைக் கவனித்துக்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும், நலத்திட்டங்களுக்கு அரசாங்கம் செலவிட வேண்டும் என்றும் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் நம்புகின்றார்கள். பொதுவாக இளம் இலங்கையர்கள் (30 வயதுக்கு குறைவானவர்கள்) மத்தியில் புதிய தாராளவாத முன்மொழிவுகள் பற்றி சற்று அதிக ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது.

**முற்றும்**

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) ஆய்வுப் பிரிவாகும். இது 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறுவப்பட்டது, இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளில் நிரந்தர, தொழில்முறை மற்றும் சுயாதீனமான வாக்களிப்பு வசதிக்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்புகிறது. வாக்குப்பதிவு என்பது ஜனநாயபத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையால் உந்தப்பட்டு, SI அதன் தொடக்கத்தில் இருந்தே பல சமூக-பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளில் கருத்துக் கணிப்புக்களை நடத்தி வருகிறது.